**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 77/2025**
**U/s. 296(b),118(1),351(3) BNS**
**PROSECUTION WITNESS NO. 5 (LW.6 )**

| | |
|---|---|
| **Name** : ரஞ்சன் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 77/2025 18.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 3.45**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் போகி லெட்சுமி நாயக்கத்தில் குடியிருந்து ஹோட்டல் நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு சண்டை நடந்ததா என்று விசாரித்தற்கு சண்டை நடந்தது என்று போலீசாரிடம் சொன்னேன்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை மேற்கு காவல் நிலைய தலைமை காவலர் 2376 திருமதி. மோகனசுந்தரி அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 14.08.2024 ம் தேதி 9.30 மணிக்கு தஞ்சை தெற்குவீதி நாதன் காபி கடைக்கு வரும்போது 13.08.2024 ம் தேதி இரண்டு நபர்கள் கண்ணாடி டம்ளரை தூக்கி வீசியும், மடக்கு கத்தியால் கிழித்து இரத்த காயம் ஏற்படுத்தியது சம்மந்தமாக வழக்கு பதிவு செய்து, தஞ்சை மேற்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார். அதில் நானும், மணிகண்டன் என்பவரும் போலீசார் கேட்டுகொண்டதன் பேரில் சம்மதித்து கையொப்பம் செய்தோம் என போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

ஒப்பம் – S.T. கனிமொழி.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.